
# ஜம்புகேதீஸ்வர சம்புநாதேஸ்வரம்
## ஆலய அமைப்பு



அன்னை பனிப்புலத்து முத்துமாரியம்மன்
தீர்த்த திருவிழாவின் போது வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பில்துறை சித்த பிராணரும் / மயான சம்பீஸ்வரரும் ஜம்பு நாதேஸ்வரக் கோயிலின் வரலாறும் நரசிங்க சுவாமியின்

இலங்கையின் வடகரையின் தொடக்கத்தில் அண்டினோர்க்கு அருள்புரியும் ஜம்பு நாதேஸ்வர ஆலயம் தமிழ் சங்க காலத்தில் ஏற்பட்ட மூன்றாவது கடல் கோளின் போது சமுத்திரத்தினுள் ஆழ்ந்து போயிற்று. அதன் புகழையும், கீர்த்தியையும் , மகிமையும் உணர்ந்த நரசிங்க சுவாமிகள் ஆலயம் அமைக்கும் பணியில் அயராது செயற்படுகின்றார். இவ்வாலயம் துறைமுகத்தை தலமாகவும் , விருட்ச பதியாகவும் , தீர்த்த துறையாகவும் விளங்குவது அற்புதமானதாகும். இவ்வாலயம் குடமுழுக்கு பெற்று புண்ணிய தலமாக விளங்க அடியார்களின் ஒத்துழைப்பே கைங்காரியமாகும். இவ்வாலயம் நிறைவு பெற்றதோர் தொன்மை ஆலயமாக திகழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

## சம்பில்துறை சித்த பிரானாரும் மயான சம்பீஸ்வரரும்

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஈழத்தின் சம்பில்துறை என்னும் புண்ணிய பூமி. இற்றைக்குப் பல நூற்று ஆண்டுகளுக்கு முன் சங்கமித்தை போதி மரத்துடன் வந்திறங்கிய பதி மாதகல்ப்பதி. கம்பன் இராமாயணத்திலே அயோத்தி மாநகரக் கொடிகள் இராமன் வரவை ''ஐயனே இங்கே வா'' ''உனக்காக திருமகளாகிய சீதை சிவந்த தாமரை மலரினில் இருந்து இங்கே வந்து காத்திருக்கின்றாள். விரைந்து வா'' என வரவேற்றன என தற்குறிப்பேற்றமாக பாடினான். சங்கராதியோரும் சித்தர்களும் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சைவத்தைப் பரப்ப வருகை தந்தபோது மாதகலாகிய சம்பில் துறையினிலே கடலலைகள் இச் சித்தர்கள், ஆண்டிகள், பண்டாரங்கள் ஆகியோரை வருக வருக என தமது இனிமையான சங்கீதத்தை எழுப்பி வரவேற்றன. அவ்வாறு அப்பெருமக்கள் வருகையை பஞ்சபூதங்களும், தேவர்களும் கூட இங்கே சம்பூநாதன் தலத்தோடு 7 தலங்களில் லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து சைவத்தை வளர்க்க வாருங்கள் என வரவேற்றனர்.

சைவநெறிக்காவலர்களால் அமைக்கப்பட்ட லிங்கங்கள்

1. மாதகல் சம்பீஸ்வரம்
2. திருக்கேதீஸ்வரம்
3. கோணேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முன்னேஸ்வரம்
5. திருக்கோவில் சிவன்
6. நகுலேஸ்வரம்
7. ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரம் ஆகியனவாம்.

சம்புலிங்கமாக மாதகல்பதியினில் தாபிக்கப்பட்ட லிங்கத்தைச் சூழ்ந்து தண்ணீர் ஊற்றுப் பெருகியவாறு இருக்கும். அ∴து கடல் கொள்ள அவ்விடத்தில் நின்று 4 மைல் தூரத்தில் மண்ணோடு மண்ணாகி விண்சேர்ந்து ஒளிபரப்பியோர் மயானத்தின் கண் தற்போது சம்புநாதன் தலமும் மண்டபமும் மடமும் இனிது எழுந்து அழகாகக் கடல்மாநகர் போன்று காட்சியளிக்கின்றது. இம்மண்டபம் மடம் சம்பீஸ்வரன் ஆலயம் விண்ணுற ஓங்கி வளர தர்மகாத்தாவாகப் பல சிரமங்கள் மத்தியில் இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்தார் தவயோகி சித்தர் நரசிங்க சுவாமி அவர்கள் பெருமுயற்சி எடுத்து அவ் வாலயச் சிறப்பைக் கண்டு மனம் புளகாங்கிதம் எய்துகின்றார். மறைகுல மானிடரில் பண்பாகி பரமனை அடையும் ஞானத்தின் வழியால் உள்ளத்தினுள்ளே உட்கலந்து பணிவிடைகள் செய்து துன்பப்படுவோர்தமைத் துயர்நீக்கி நல்ல குருநாதராய் நம்பிடும் அடியார்க்கு வழிகாட்டிக் காப்பாற்றும் நிறைந்த மனமுடைய நரசிங்க சித்தர். இவர் 14 ஆண்டுகள் தவம் செய்தவர். இவர்தம் வாழ்க்கை வரலாறு பின்பு விரிவாக எழுதப்படும். சித்த பிராமனார் மாதக்கல் சம்புநாதர் தோத்திரப் பாமாலைகளை வெளியிடுகின்றார். தாமும் பல பாடல்கள் பாடித் தம் அடியவர் ஒருவரைக் கொண்டும் பாடல்கள் பாடி சிறப்பாகத் தொகுத்து வெளியிடுகின்றார்.

01. கரையோரக் கண்ணா போற்றி கலங்க
மதியில் உருவாகி ஆமையுருவங்
கொண்டு நாணமும் ஒளியுமாகி
சங்கு சங்கரனாய் ஆண்டியாம்
அருளுடையார் அன்புற பண்புற
வாசனையில்ப் பதி இருந்து ஆளும்
புதுமையின் பரதனை புதுமையாய்
அமைந்த நதிகரை ஓரத்தில் பொன்னாலை
வரத ராஜப் பெருமான் ஆலய
அருகாமையில் திருவடி நிலைகளமும்
பொருந்திய மானிடங்காக்கும்
அருள்வானம் பொங்க அரிகரி
புத்திரன் ஐய பிரானாகிய ஹரி
கரனாய் ஆண்டியின் பண்பினம்
வாழும் காலையடிப் பண்புடன்
வதிக்கும் ஐயன் பெயர்
கொண்ட மூலமூர்த்தி ஜம்புகேதீஸ்வரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. சுழிபுரம் பதியும் திருவடி நிலையும்
அருகாமை எழுந்திருக்கும்
புலம் சூழ்ந்திருக்கும் பெருமான்
மண்ணார்க்கு மண்ணொளியில்
மனு ஒளியாய் உருவழியாகி
தர்வீக தருணத்தில் ஆண்டி
முகமாகி களிகரை தன்னில்
போதமாதர் வந்த வழிதுறையில்
ஆதிசம்புலிங்கமாகி அமர்ந்த ஈசா!

03. உண்டாறும் பார் உலகிற் பல கோடி
உண்டறுப்பார் மானுடத்தார்
நிண்டறுப்பார் இறைகோடி
முற்பிறப்பை அறிவை பூலோகப்
பரசர வாழ்வில் மனுசரமா
தோன்றி மானினம் மறைய
அருளோனம் மையபுரம்
காக்கும் செயலறி சிவனெறி
நலனெறியை பூத்தாறு புகழாறு
மனமாறு சிவனாறு.

04. உமையான இறப்பழியறுந்து
ஆய அலைபோல் தீர்க்கறுக்கும்
பிறப்பொழியாய் மையப்புரத்தில்
அல்லல் அறுத்துத் தீவினை
அறுப்பாய் போற்றி கணங்கள்
போற்றிடும் சம்புநாதா
நோற்பார் முதற்பதினோர்
நாற்பார் இயற்பணிவோர்
ஏற்றிடும் சம்புநாதா
காத்திடுவாய் நீ காத்திடுவாய் நீ
கனபுரந்தனை வனவழி
தன்னில் ஐயன் பொருந்தி
அன்புடன் நாம்வளர்க்கும்
மெய்யன்புறை ஆளாகிச் சேர்ந்து
உறையும் ஐயமகன் அரிகர
புத்திரனாய் நடுவோன்
முதலாகி மண்ணுளோர்
முகங்களாகி அவர்களின்
முகமாகி உணர்வலை
பெற்றெடுத்த அருளலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட தாயின் தனந்தருவோன்
வனம் காக்கும் வரன் சிவன்
மைந்தன் ஐங்கரனாய்
அரிகரன் புத்திரனாய்
உலகாள் ஈசா மதிநிறைய
வரந்தருவாய்.



## விநாயகர் காப்பு

01. அன்னை தந்தையே அகிலமென்றே வலம் வந்து
மாங்கனி பெற்றவனே மயிலேறும் வடிவேலனுக்கு மூத்தவனே
என் தீவினைகள் மாள பங்கஜ மலர்ப் பதம் சிவம் பொலிக்க
என்னருகில் வாராய், நின் காட்சி தாராய் கணபதியே
அன்னையும் தந்தையுமாகிய எம் அன்புக் கஜவதனா
அண்டசராசரம் அனைத்துமே உன்
ஓங்கார வடிவினுள்ளடக்கம்.
தீயாரைச் சங்கரிக்க வந்திடுவாயே கஜமுக சங்காரா
மாயமே நீக்கி மனிதிடர் களையாயோ?
மலைமகள் மகிழும் சுதனே
வண்டுகள் ரீங்கார மிசைத்தே மகிழும் மாதகல்ப்பதி
விண்ணுற ஓங்கிடும் சம்புநாதன் தலத்து
நிருதித்திசைதனில் அமர்ந்தவனே மங்களம்
எங்குமே பொங்கிட மன்னவனே மாதுமை சுதனே வாராய்
சிற்றறிவு தானேனுமிலாத சிறியேனின்
சின்னக்கவி சிறந்திட நயத்து நண்ணிக் காப்பாகி அமைந்திடாய்யா

02. பாமாலைச் சித்தன் போற்றும் பரமேஸ்வரா (4 தடவை)
நாவாலே இன் தமிழில் யான் பாடநலமருளும் சர்வேஸ்வரா
(பாமாலை)

தீராதவினை தீர்க்க மாதகல்ப் பதியினிலே
தடலை தனிலாடிடும் சம்பு ஈஸ்வரா
(பாமாலை)

காரானை மாமுகனும் கனகபுயமிசைக்
கந்தனும் காணலிங்கமாய்ப் பூசிக்க
(பாமாலை)

தேனான செந்தமிழில் யான் பாடத்
தெவிட்டாத தேன் பொழிய நாவினிலே
சித்திகள் தந்திடுவாய் ஐயா
வானோர் பணிந்திட வான் புகழ் சம்பு ஈஸ்வரா (பாமாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மாதகல்ப் பதியமர் சம்புநாதா
பாதகம் தீர்க்கப் பரினில் எழுந்தனை
நீ மாதகல்ப் பதியமர்ந்தாய் ஆடிடும்
குடமுழுக்கு ஆண்டவன்
அருள் சேர்க்கும் தோத்தரித்தோமைய
எம் அருள்க் குருநாதன் உன்
ஆலயம் தாபித்தான் ஆர்த்த
கடலலை எழும்பியே ஆர்ப்பரிக்கும்
ஐயனவன் சிவன் புகழ் இட்டமுடன் இசைக்கும்.

பிரார்த்தனை செய்தோம் ஐயா
எமக்கருள் வாருமையா
சுடலையில் ஆடிடும் பெருமான்
சுகமருள ஆடிடுவாய்
தஜம் தகஜம் தகதிமி தளாங்கு
தகதிமி தகததி கிணதோம்
தளாங்கு தகதிமிதக ததிகிணதோம்
தகதிமிதக ததிகிணதோம்

04. நரசிங்க சித்தர் பணியும் சிவனே
பரஞான பக்குவமும் வாக்கும்
தரவிங்கே வந்த தயாளனே சிவனே
கரதலங்களிலே ஆலமேந்தும் கவினுரு சிவனே
வரகவியாகித் தருமிக்குப் பொற்கிழி
தருங்குருவே வருவாய் சிவனே.

05. ஆடிடும் சம்புநாதனைப் பணி மனமே
வாடிடும் மனிதன் மயக்கம் தீர்ப்பான்
கூடலூர் சிவனே குடியுரிமை வழங்கிடப்பா
தேடுகின்றேன் உனைத்தினமும்
எமது ஏக்கம் தீர்த்திடப்பா.
ஞானத்தின் குருவுருவாய் நல்லகுருநாதன்
மோனத்தின் வடிவாய் என்குறை
தீர்த்து வரம் தந்தான்
வந்தான் மாதகல் சம்புநாத நின்னருளால்

06. வடிவுடன் வரவேற்கும் வடிவான
மாதகலை வலம் வந்த சம்பூ
திடமுடன் உனைத் தொழுதேன்
வடிவான உமையோடு வந்தேன்
ஔடதமாக எமக்கு அரண் தந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமையை நீக்கிடப்பா
குடிமுழுதாண்ட என்குருவின்
குலதெய்வமல்லவா? எம்குறை
தீர்க்க வந்த சம்பூ
என் தந்தையும் தாயுமான சிவசம்போ ஹரசம்போ.

07. சாந்தம் தவழும் குருநாதன் சந்நிதி வந்தேன்
சாந்தி வந்தது என்துயரம் பறந்தது
வந்தன் சம்புநாதன் எந்தனிடர் நீக்கிட
மாற்றார் கொடுமை போக்கிட சற்குருவை அனுப்பினனே
சாந்தம் தவழும் குருநாதன் சந்நிதி
வந்ததால் சம்புநாதன் புகழ்பாடுகின்றேன்.

08. மாதகல்ப்புறவாசன் மலைமகள் பதம் பணிநேசன்
பாகமழித்து நின்று பாரினில் சித்திகள் தந்தான்
வேதனை தீர்க்க வந்தான்
வேண்டும் வரம் நல்க வந்தான்
கோதிலாதே குணமருள வந்தான்
பாவினைத் தந்து பாடவும் சொன்னான்
மாதுமையோடு மாதகல்ப்பதி நின்றான்
சாதனை காட்டி சார்ந்தோர்க்கு அருளி
மேதினியில் புகழாகி நின்றான் மேகலை அசைந்திட
வரும் உமையோடு கூடி நின்றான் மாதகல்ச் சம்புநாதன்

09. உமையோடு எம் உள்ளத்தே ஆடிடும் உத்தமனே
அமைவான பதியினிலே மாதகலில் அமர்ந்தவனே
(உமையோடு)
சட்டியில் மா வறுத்தான் அப்பன் சிவனே
சோமவார உபாசகரைத் தொல்வினை அனுகாதே
தேவியுமையுடன் வந்து மாதகலில் காட்சி கொடுப்பான்
சம்புநாத சிவசம்போ சிவசம்போ

10. தமிழ்மறை அனைத்தும்
தலைவ நின் புகழினை இசைக்கும்
அமுதொடு தேனும் அரும்பாகு இனிக்கும்
சேக்கிழான் அருளிய செந்தமிழ் மாமறை
தொண்டர்கள் பெருமைகூறும்
பொதிகை முனிவன் தவத்தன்மையுடை
மாதகல்ச் சித்தசுவாமி சம்புநாதன் ஆலயம் எடுத்தனன்
அலைகடலெல்லாம் நாதனின் புகழ்பாடும்
நல்வினை எல்லாம் கூடி நாட்டினில் அமைதி நிலவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஆருத்ர தரிசனம் காண்பீர் மாதகலில் ஆங்கு
நேருத்ரனை நெற்றிக் கண்ணனைக் காண்பீர்
திரும்பினை நாட்டினான் சலந்தரன் அகந்தை அழித்தான்
(ததரினானா)
தானவனுக்கு வரத்தைக் கொடுத்தான்
மாதவன் யாதவனைச் சரணமடைந்தான்
சோதனைகள் பல கண்டோம் எம்
சோர்வு தனை நீக்கிவிடு
மாதகல்ப் பதியமர் சிவசம்பூ (4 தடவை)

12. அழகான மயிற்பீலி அணிந்திடும்
கண்ணனும் நின்பாதம் பணியக் கண்டேன்
வேல் தாங்கி வந்த வேலவன்
குமரேசனும் உன்பாதம் ஆடக்கண்டேன்
மெல்ல நகரும் மூஷகத்தில்
வரும் விநாயகனும் பத்திரமாய் வந்து வணங்கக் கண்டேன்
மெல்லியள் உமையும் நின்பாத சேவை செய்யக் கண்டேன்
அந்திரமாய்க் கடற்கரையில்
வந்து நின்று உமையாளின்
கணவனைக் காண என்று
மாதல்ப்பதி வந்து சிவன் சம்பு
நாதன் அதிரூப தரிசனம் கண்டு கொண்டேன்

13. ஈசனே உலகினுக்கு நாயகன்
ஈசனே உமையாவளின் நாயகன்
மாசகல என்துயரமவன பாதம்சேர
இன்ப வாழ்வு தரவே உமையோடும்
உலகாளும் நாயகன் ரிஷபத்தில்
வந்தனனே தந்தனனே நின்காட்சி
அழகான ஆறுமுகனுக்கும் கணபதிக்கும் அப்பனல்லவா
என்னிடர் யாவும் போக்க மாதகல்ப்
பதிதனில் சம்புநாதன் வானோங்க ஆலயம் எழுக
தமிழ்க் குடி வாழ்க.

14. கார்த்திகைத் திங்கள் நோன்பிருப்பாய் நீ
நேர்த்திகள் வைத்து நேரான பாதையில் செல்வாய்
தோத்திரம் செய்வாயீசனை எமை மனமோகனனை
தெள்ளிய நீரினில் நீராடு சிவன் நாமபஜனம் தோத்திரம்பாடு
தெள்ளு தமிழினில் தேவாரம்பாடு
கள்ளமிலாதே இதயத்தாமரையால் அர்ச்சனை செய்வாய்
திண்ணிய உள்ளத்தோடு மாதகல்ச் சம்புநாதன் பதம்பணி நீ
சிவசம்பு அவனருள் கிட்டிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உனது பதம் மறவாத வரம்வேண்டுமே
தயவான குணமும் தாராள உள்ளமும்
எந்தை நினதருளால் யான் பெறவேண்டுமே
மாதகல்ப் பதியமர்ந்த மன்னவனே மானேர்விழியுமை
பாகமமர்ந்தவனே
என் குரு நாதன் தினம்பணியும் இறையவனே
சம்புநாத சிவனே உனைமறவோமே.

16. சிந்தித்தவர்க்குச் சீக்கிரமே அருள்வான்
புந்தியில் அவன்பாதம் வைத்திடு
புண்ணிய நல்வினைகள் வந்து கூடிடும்
எந்தையினருளால் எல்லாநலமும் சீக்கிரமே கூடிடும்
முந்தை வினையும் பறந்துவிட
மூர்த்தியவன் நீ கேட்பது எல்லாம் தருவான்
மாதகலில் சென்று சம்புநாதனின் பாதமலர் பணிவாயே.

17. குறையேதும் எனக்கில்லைத் தோழீ
அழகான மான்விழியுமையோடு
இடபத்தில் வந்தே எனையாளும்
சிவன் இருக்கக்
(குறை)
திருமாலும் பிரம்மனும் தேவரும்
மனிதரும் அசுரரும் துதிக்க நின்ற
அருள் செய்த நிமலன் இருக்கக்
(குறை)
விநாயகனும் முருகனும் விளையாடி வலம்வரவே
வினையேதும் சாராது முத்திதரவே
எமைத்தேடிச் சம்புநாதன்
மாதகலில் உறைந்தானே
(குறை)
நீலக்கடலில் ஆர்ப்பரித்துச் சிப்பியும்
அங்கும் கொட்டிச் செல்லும்
உமையோடு இடபத்தில்
ஈசனார் சம்புநாதன் மாதகலில்
அருளாட்சி செய்கையில்
(குறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஆடுக ஊஞ்சல் ஐயா சிவனே
ஆடுக ஊஞ்சல் ஐயா சிவனே
கங்கையைச் சிரசினிற் தரித்தாயே (ஆடுக)

காசினி எங்கும் வாசஞ் செய்வாயே
சகல சீவர்க்கும் கருணை செய்வாயே
(ஆடுக)
ஈங்கு நீயில்லையேல் யார் துணை நமக்கு
(ஆடுக)
சிவனே நீயும் இரங்காவிடில்
இந்த ஏழைக்கு அருள் புரியாவிடில்
இக்குழவியுயிர் வந்திடுமோ?
(ஆடுக)
சங்கர ஈஸ்வரா கங்காதரை பூரணா
திங்கள் ஆடிடும் ஆதிகாரணா
மான்மழு ஏந்திடும் மங்கள நாயகா
பொங்கராவணியீஸ்வரா மாதகல் சம்பூ சிவசம்பூ
(ஆடுக)

19. திங்களணி சிவனே வீரதிர மங்களகரனே
பங்கஜபதபவனனே அங்கார ஈசனே
எங்கணும் நிறையும் சுந்தரமோகனா
அங்கண நாயகர் துதிக்கக் கைலாசகிரி யுறைசபேச
பொங்கிட அருள்புரி இன்பமே என்றும்
செங்கமலப் பதநாயக அங்கராத்மஜா
அங்குச பாசன் எந்தை விந்தையறிமுகன் தந்தை
தக்கிட கிடதகி தெய்தாம் தாம்பிதா தெய்தாம்
தகயும் ததிங்கிணதோம் என ஆடிடும்
அந்தர நிர்த்தன பாதம் நித்தமும் மறவேனே
மாதகல்ச் சம்பு ஈஸ்வரனே

20. ஆடிடுவாயே புவனமெலாம் அசைந்திட
கூடிடும் தேவர் குழாம் துதித்திட
(ஆடி)
சுந்தராங்கியுமையொடு தென்
கயிலையில் நந்தீ கணம் புடைசூழ
(ஆடி)
ஆர்த்த சமுத்திர வஸ்திக்களுமாடிட
அகிலமீதுள்ள அனைத்து சீவராசிகளுமாடிட
(ஆடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயிலினமாடிட ஆவின மாடிட
மயிலினம் கூடியே ஆடிட
மாமரையினங்களுமாடிடத் தாரணியுறை
சகலசீவராசிகளுக்கும் வாழ்வு அருள
ஆடிடுவாயே சம்புநாதா சுடலையில் (ஆடி)

21. தவமிருந்தேன் தரிசனம் தருவாயே சம்பூ சிவசம்பூ
பாவவினை போக்கிடும் பரமதயாளனே
அவமெல்லாம் நீங்கிட ஆடியே நீ வருவாய்
புவனமுழுதாளும் புண்யஸ்வருபனே புவனேஸ்வரா
அகிலலோக ஆனந்தத் தாண்டவ அதிரூப சுந்தரா
தரிசனந்தர வரும் ரிஷிபாசனா பஸ்மாசுர சங்காரமைத்துனா
சலந்தரா சுரசங்கார சங்கர நாயகா
புலந்தனை ஆண்டிடும் புவனேசா
மாதகல்ச் சம்பு ஈஸ்வரா கிருபை கடாக்ஷ நாயகா

22. கண்ணுக்குள் கண்ணாகி
நின்றதாய் கானநாதா
என்னுக்குள் நிறைந்து ஏக்கம் தீர்த்தாய் எந்தாய்
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனே வினைதீராய்
பண்ணுக்குப் பண்ணான பரமபாகவதனே
பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பெற்றாய்
என் பாட்டுக்கு கேட்டு நீயும் இரங்கி வாராயோ?
பண்ணுக்குள் வண்ணமலருக்குள்
நீயிருப்பாய் என்ற பாவலர்
சொற்கேட்டு எண்ணுக்கு
அடங்கா இடம் எல்லாம் யான் தேட
எனையாட் கொண்ட குருவின்
மாதகல்ப் பதியில் நீயிருக்கின்றாய்.

23. ஓம் நமசிவாய என்ற பஞ்சாக்ஷரம்
தினமும் நீ ஜெபிப்பாயே
திங்கள் கங்கை சடையணி
எங்கள் இறையருள் கூடிடும். (ஓம்)
ஐம்புலன் ஒடுங்கும் ஆசையும் அடங்கும்
எம்வினை தீரும் ஏக்கங்கள் மறையும்
துன்பத்தினை அணுகா துயரும் சேர
வன்பினையாளர் அகன்றிட
என்பெலாமுருகிட எமதீசன்
நன்வரம் தந்திடுவான்
மாதகல்ச் சம்புநாதசிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. தாய்மையுடன் வாய்மையும் நல்வரமும் வேண்டிடின்
பன்றிகட்கருள் புரிந்த பரமனின் பதம் பணிவாய்
நேர்மையும் வரமிகு கல்வியும்
தயைவுடன் நற்குண சம்பத்தும்
சாந்தமும் சார்ந்திட உன்னிடம் (பரமனின்)

சஞ்சலம் தீரும் சாந்தி நிறைந்திடும்
சங்கடம் அகன்றிடும் பொறுமை நிறைந்திடும்
தாயாதி சுற்றம் எல்லாம் வாழ்ந்திட
பண்புடன் புவிமாந்தர் புண்ணிய சேவை கூடிய
(பரமனின்)

25. சப்த ஈஸ்வரங்களுள் ஒன்றாய்
முதலாய்த் திகழ்ந்திடும்
சம்பீஸ்வரத்துச் சம்புநாதனே
சங்கருடன் சித்தர்கள் வந்து
தரிசனம் செய்து தாபித்த சம்புலிங்கமே
வானவரும் மண்ணவரும் போற்ற
பூதங்கள் அமைத்த தலத்துள்
மாதகலில் அமர்ந்தவனே
நீ குடமுழுக்கு ஆடிடுவாய்

26. சுப்ரமண்யன் தந்தை அல்லவா
சகல சுகம் தந்தாளும் சுகேஸ்வரன்
சிவனல்லவா? மைந்தன்தனைக்
குருவாக்கிடும் மெய்ஞ்ஞானமருள்
தபோதனன் அல்லவா?
எங்கள் வேதனை தீர்க்க
வந்த தாமறை துதிக்கும் சிவனல்லவா?
மாமறை போற்றும் மகேசனல்லவா?
மாதகல்ப் பதியினில் மனங் கொண்ட
அன்பனின் கோவில் உறையும்
சம்புநாதனல்லவா? பவசாகரம்
தாண்ட பாபநாசஞ் செய்யும்
பார்வதி மனமோஹனனை
அனுதினம் பணி மனமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. சகல செல்வம் அருள வருஞ் சிவனே
ஜெகம் ஆளுளே கைலாசகிரி வாசா
மங்களாங்கியுமை மகிழ்மனமோகனா
பொங்கரவுடன் பொழியும் கங்கை
திங்கள் சூடிடும் சிவனே
அன்பர் மனக்குகைதனில் அமர்ந்தவனே
மாதகல் உறைவாசா
சாதுகள் பணியும் சர்வேசா
(சர்வேசா)
ஆனந்தப்பாற்கடல் தபசியுபமன்பு மகிழ அளித்தவனே
அனந்த சயனதிபதி மகிழ உவகை கொள்ள
சக்ராயுதம் அளித்த சங்கரேஸ்வரா சரணம்
தமியேனுக்கு வேண்டும் வரம்
மாதகலில் உறைந்திடுவாய் சம்புநாதா

28. திரிபதாஹோ ஹஸ்த சிம்ஹமுகஹ ஹஸ்தபாவனா
அர்த்த நாரீஸ்வரா சப்தமரிஷிகள் துதிக்கும் ஜெகநாயகா
ஆக்குதற்கும் அளிப்பதற்கும்
காப்பதற்கும் அளிப்பதற்கும்
அருள்வதற்கும் வல்ல சிவனே
மாதகல்ச் சுடலையில் ஆனந்த நடனம் ஆடுபவனே
ஆடிடும் சம்புதான் பதச்சிலம்பு
ஒலி கலீர் கலீர் என ஆனந்த
நடனமுடன் ஆரணமதிர இசைக்குதே

29. வயல் சூழ்ந்தும் வாவிகள்
சூழ்ந்தும் வாழுமாந்தர் இயலோடு
இசை சேர்ந்த தமிழ்வாழும் சித்தன்
நரசிங்க சுவாமி அமைக்கும்
சம்புநாத தலம் சூழ வரும் அடியார்
அசைந்தசைந்து துதிபாட
அரன் தன்னோடு உமை சேர்ந்து
நடனமாட கயல்மீன்கள் கவிபாடும்
மாதகல்ச் சம்புநாதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம்
# ஸ்ரீ நரசிங்க குரு நாதனே
# ஸத் - குருதேவோ

01. சித்தம் சித்தம் சித்தாசன பிரம்மம்
ஓம் மூல மாமுக மந்திரம்
தான வாயான் வழி சுற்றும்
பாத வாய் வழி பாவமும்
பார்த்திட பரனட காத்திட
நீற்றவா உன் மன தடியை
ஓம் கார்முகில் கண்ணா கர்மா
ஈனவற்கு ஒளி வளர் பூசமும்
ஓம் கருங்கண்ண ஜெய பிரம்மம்
ஆதியே பெரு ஆசனம்
தாரக மதி மந்திரம்
ஆயனறியே சிவனெறியே!
சிவபுத்தரசே சிவனெறியே!
ஓம் சிவாயன சத்தியானந்தம் !
மக புர சத்தி அகரனந்தம்
மிகர விரத தணியேயாய ரூசனம்
சர்வ சக்தியே பிரம்ம கோபாலா
சிவனெறியே சிவயன நம ஓம்.

02. சிவாயனந்த சித்தியானந்தம்
பரனடி செல்வம் காற்றிட பூர்க்க
கர்ம வினைகள் அகன்றடி பிரணம்
தர்வ யோகம் தத்வீகம்
நினையடி அகல விக்ணேஸ்வராயண
நம குருவே நாராயணா
சிக்கல் நீக்கி திருவருள் தருவாய்
ஓம் சிவாயாய லோகம்
மாய சித்தியானந்த குருவே
மறை பிறை மறந்தால் திற மருள் சிவனே
ஓம் சிவாயன நம குருவே நாராயணா
ஓம் விக்கினேஸ்வராய நம குருவே நாராயணா
ஓம் நரசிங்க ரூப நாராயணா பலநெறி நாயகா
இயல்பாய் இலங்கை இயல்புரி நாயகா
தயனம் முற்பாய் சரணம் - சரணம்
முகநெறி மகனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தை அறுத்து அருள்புரிவாராக
ஓம் சிங்க ரூப நாராயணா
ஓம் நரசிங்க ரூப நாராயணா
பரகுகனே சரவன குகனே நாராயணா
பக்தானந்தம் சர்வானந்தம்
சரணம் ! சரணம் !சரவணபவகுக நாராயணா

03. காலடியின் குருவருளே
கச்சியம் பதியினிலே
நாலடிகள் நடக்காதோ
நல்ல மழை பொழியாதோ......
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே.......
இரண்டல்ல ஒன்றென்ன
அத்வைத தத்துவமே
வரந்தரவே நின் கரமே
வந்த வினை தீர்ந்திடுமே
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே.......

அண்டம் அமைதியுற
அனைவருமே அனைத்தும் பெற
''தண்டம்'' தான் சுமந்து
தவமிருக்கும் திருவருளே....
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

பாரண்ட மன்னரெல்லாம்
பாதத்தில் பனிந்திருக்க
நூலுண்டு ''தெய்வமகன்''
நமக்காக நோன்பு இருக்க
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

அகமெல்லாம் நிறைந்து
ஆனந்தம் நிறைக்கின்ற
ஜகமெல்லாம் போற்றிடும்
ஜகத் குருவே குருவுருவே ...
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம் செய்த தவம்
மூவுலகு நெய்த தவம்
பின்னும் இருந்த தவம்
பெற்றோரும் புரிந்த தவம்....
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

நாதங்கள் ஒலித்திடும்
நகரேஷி காஞ்சிதனில்
பாதங்கள் பற்றிடவும்
பாவங்கள் அகற்றிடவும்...
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

நவ யுக நாயகனாம்
நான் மறை தாயவனாம்
தவமுனி யானவனாம்
தன்மையில் சேய்யவனாம்
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

ஞான மலர் கண்திறக்க
ஞாலமெல்லாம் பொன்பிறக்க
மோனநிலை அருள் பெருக
மேதினியில் இருள் விலக...
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

கல்லும் கரைந்தோடும்
கனிவான பார்வையிலே
முள்ளும் மலராகும்
முப்புரமும் மணமாகும்
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் கவரி வீச
கீதங்கள் கருணை பேச
நாதங்கள் பண்ணிசைக்க
ஞானதேவன் கண்ணசைக்க
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

நின் பாத மண்ணாலே
என் பாவம் மடியட்டும்
என் பாவம் மடியட்டும்
நின் பாத மண்ணாலோ
என்ன தவம் செய்தோமோ இங்கு
இவரை யாம் பெறவே....

## ஓம் ஸ்ரீ ஸத் குருதேவோ நம

ஓம் விக்கினேஸ்வராய நம : ஓம்
ஓம் சிவாய நம : ஓம்
ஓம் குரு நாராயணாய நம : ஓம்
ஓம் சிவாநந்த குருவே நாராயணாய நம : ஓம்
ஓம் தாரஸிம்ஹ ரூப நாராயணாய சயன நம : ஓம்
ஓம் ஸர்வ பாரத சுத்தானந்த நாராயணாய நம : ஓம்
ஓம் சிவாய நம : ஓம்
ஓம் சிவாய சத்யானந்த நம : ஓம்
ஓம் சர்வ கோல மங்கள புருஷாய நம : ஓம்
ஓம் த்ரிகுடபாசா சத்ரு வினாசகாய நம : ஓம்
ஓம் சக்ர பாணா சபய சச்சிதானந்த நம : ஓம்
ஓம் ஸத்குரு மேயா ஸர்வ சித்தானந்தாய நம : ஓம்
ஓம் சகல பதியாக தந்த குருவே
சரணம் சரணம் நந்தகுருவே சரணம்
நாதனாய் - தயவாய் - இணைவாய் - எனக்கு
ஈடரிய துன்பத்தை நீட்டருப்பாய் நீரும்
துரியானந்த பற்றுதலை ஏற்றருள்வாய் நீரும் !

## குருவருள்

''ஓம் சிவாய நம குருவே நாராயணா
ஓம் விக்கினேஸ்வராயன நம குருவே நாராயணா
ஓம் சக்தி ரூப நாராயணா
ஓம் நரசிங்க ரூப நாராயணா''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமும் நீயே, வையமும் நீயே, வாழுகின்ற மாந்தரும் நீயே, மாந்தர் வாழுகின்ற செல்வத்தன் புகழுடையான் நீயே, தளராத உள்ளத்தை தந்திடும் ஒப்பற்றவனும் நீயே,
உள்ளள் உள்ளறியேன் பிற்பிறவி நீ அறியாய்
முக்கனியும் உள்புற

சங்கரிய ஒழுக்கத்தை உன்கரிய நெஞ்சிப் வைப்பவரும் நீயே உன்னறிவை யாரும் உலகறிந்த உன் பக்தை நற்பரிவான் ஞானத்தின் சுடறறிவான் வானத்த வையுலகமாக்கி மெய் மேனியை உளமும் பெற்று ஐங்கரிய புலன்ஐந்தாய் , நின்றிய நிலையற்க்கே நீர் வளம் , காற்றிமை போல் புகுந்தருன்று காந்தமும் , காரணியை மாற்றான் மனதை மார்பதத்தை நீ அடைந்து ஊக்கருன்று, உள்ளருன்று ஊற்றார் பூ மரம் போல் , உன்னால் வா வெளியால் மண்ணவர்க்கும் , விண்ணவர்க்கும் வாற்றடங்கி, பூற்றிடங்கும் மலர் விழியால் இமை வழங்குவதன் போல் , ஊற்க்கலை ஊற்றருக்கும் , நாமார் துதியழகை நாவிற்கு இணைந்தாறும் பேரவாழ் பேரணமாய் ஊரார் உகமாய் உற்றிய நாமம் , பெற்றறிய, ஞானம் நற்பிறவி, இப்பிறவி கற்றறிந்தோம் நாம் அறிக.

ஐந்தரியும் நெஞ்சில் என்மனர்க் காந்த உன்னறிய ஒன்பதும் ஒரு புலனணதாய் உன்னருள் பெற்று கற்ற நெறி அறியாய் ,காமுகனை முற்றும் பணி செய்து பிறவி மாசறைக் கடல்நீர் கலந்தருளும் உப்பு நிற மணல் உருவாகி மேனியை உனதுவசம் கடத்தி பாதம் இரண்டும் பாத புகுந்தமாய் மேலிட்ட முற்றனந் கணர்ந்து முடிவற்ற போது பரிசலமாகும் காதை மேனியை.

## சித்தர்

சித்தர் என்பவர் யாரென்றாள் அவருடைய மனம்மென்பது பிறர்நாட்டமில்லாமல் பிரதீய பஞ்சகத்தில் அவர்கள் பிறவிகள் காற்று நொடி போல் மாற்றும் மாற்றும் பொருளாகிட மானிட வித்தைகளை நீக்கி அருள் செய்து உள்ளத்தின் (ஆவாத்களை) அழுக்கை அறவே அழித்து அதன் பின்புறம் சென்று மூவாலிசாலின உள்ளத்தில் படிய விடாத அவதிநிலைப்படும் தந்திரோயங்களான அதனை பிரகாசிக்க விடாமல் உள்ளத்தில் இருப்பது போல் ஜீவ காற்றை அடக்கும் புலன் உடையவர்கள் தான் அந்த சித்தத்தில் நாக்கரத்தை உலர விடாமல் , போக்கரிய பாதையில் போக விடாமல் அருகில் நாட்டமென்னும் நாவரசை உண்டுபடுத்தி பேரரசை பெருமதியாக்கி பேரின்பக்கரசனை புறகணித்து ஈன்றருள் பெற்ற ஈசன் பண்பாடலை போல் உள்ளத்தின் தூய்மைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைபடியாக்கி அங்கரிய தங்கரியமாக்கி அந்த பூத்தமலர்களை தன் சித்தர்கள் வாழ்த்தி வணங்கும் வையத்தவர் போன்ற போற்றியாம் போற்றியாம்.

# குருவருள்

விந்தை உலகில் ஒரு ஓவியம் படைத்ததுபோல் ஒரு காவியம் ''குருவருள் இன்றேல் திருவருள் இல்லை'' பக்தியை விட சிறந்த பூஜையில்லை. மோட்சத்தைவிட சிறந்த பலன் இல்லை ஞானத்தை விடஅதிகமான சுகம் இல்லை. குருவை விட சிறந்த தத்துவமில்லை குரு என்பவர் இஞ்ஞானம் என்கின்ற இருள் நீக்குகின்ற மெஞ்ஞான சூரியன். குருவே மனிதத் தோலால் போர்த்தப்பட்ட ஈஸ்வரன் (குருவின் சரீரத்தில்) மறைந்து வசிக்கின்றார். குருவிற்கும் தெய்வத்திற்கும் பேதமில்லை ''ஆத்துமாவே குரு'' இதைச் சொல்வதும் குருநாதர் தான்.

எந்த ஒரு தெய்வ உபாசனைக்கும் குருவானவர் அமைதல் வேண்டும். ''குருவருள் இல்லையே திருவருள்'' இல்லை. ''ஆசான் அருளின்றி அமையாது ஒரு நாளும்'' தொட்டுக் காட்டாத வித்தை கட்டுப்போட்டாலும் வராது. இறைவன் என்ற அருள் அமிர்தத்தை பருக ''குரு'' என்ற பாத்திரம் தேவை. ஈஸ்வர பிரசாதம் ஏற்படவேண்டுமானால் முதலில் குருவின் அனுக்கிரகம் வேண்டும். அந்த அநுக்கிரகம் பெற வேண்டுமானால் நாம் அவரைத் தேடி சரனாகதி செய்யவேண்டும்.

குரு என்பவர் பேச வேண்டிய அவசியமில்லை. அவர் ''பார்வை'' பார்வை மிகவும் கூர்மையானது. உங்களைப் பார்த்த மாத்திரத்தில் உங்களுடைய பல பிறவிகளின் தன்மைகளை அறிய முடியும். உங்கள் தேவை என்ன என்பது அவருக்கு எளிதில் புரிந்து விடும். நீங்கள் கேட்காமலேயே உங்களுக்கு வேண்டியது தரப்படும்.

திறந்த மனதோடு ஒரு குருவை எனக்குள் இருக்கும் பிரச்சினைகளை தீர்த்து விடு என்று கை கூப்பி மனம் ஒடுங்கி கேட்டால் , அந்தப் பிரச்சினைகள் வெகு எளிதில் தீர்ந்து விடுவதை நாம் கண் கூடாக அனுபவித்திருக்கின்றோம்.

ஈஸ்வரன் நான் மறைகள் மூலமாக இவை தர்மம் அதர்மம் இதுவென்று வெளியிட்டிருப்பதினால் அந்த சரீரத்தை நாமே எடுத்து படித்தால் போதாதா? இதற்க்கு குரு எதற்கு என்று கேள்வி கேட்கலாம்?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா சாத்திரங்களை படித்து அதில் இருக்கும் சாத்திரம் முழுவதும் கற்றுக் கொண்டு தர்மனுஷ்டானாம் செய்வதென்றால் அதுவும் சாத்தியமில்லாததது. சாத்திர அப்பியாசம் செய்யவே நம் ஆயள் காலம் முழுவதும் போதாது. தவிரவும் நம்மிடம் தவறுகள் நிறைய இருப்பதுடன் அவைகளை நாமே தெரிந்துக்கொள்வது என்பது சாத்தியமில்லை. ஆகையினால் நம்முடைய பக்குவத்தை அறிந்து ''இவன் இந்தப் படியிலிருக்கிறான்'' இந்தக் காரியம் செய்தால் மேல் படிக்கு போகலாம் என்று எடுத்துச் சொல்வதற்கு ''குரு'' அவசியம்.

தானங்களில் சிறந்தது ''அன்னதானம்'' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஏனென்றால் தானம் வழங்குகின்றவனுக்கு ''திருப்தி'' படுத்தும். அது ''தானம்'' எனப்படும். அது ஒன்றுதான் எவ்வளவு பணம் கொடுத்தாலும் , வஸ்திர தானம் செய்தாலும் , பூதானம் செய்தாலும் , வாங்கிக் கொள்கிறவனுக்கு போதும் என்று சொல்கிற மனம் வராது. ஆனால் அன்னதானதில் எவ்வளவு சாப்பிட முடியுமோ அவ்வளவும் சாப்பிட்டுவிட்டு ''போதும்'' என்று சொல்லி விடுவான். அதற்கு மேல் ஒரு கவளம் எடுத்தாலும் வேண்டாம் என்று சொல்லி விடுவான். இவ்விதம் போதும் என்று சொல்கிற வரையில் திருப்தியை ஏற்படுத்துவது ''தானம்'' அன்னதானம் ஒன்றுதான்.

எக்காலத்திலும் எந்த விஷயத்திலும் திருப்தியை ஏற்படுத்தக் கூடிய ''தானம்'' ஞானதானமாகும். அவ்விதமான பரமபவித்திரமான ''ஞானதானத்தை'' செய்கிற சற்குருவிற்கு இணையாக எதைச் சொல்ல முடியும். குருவானவர் எப்படி என்றால் தன்னைச் சரணடைந்த தன் சிஷ்யனை தனக்கு எந்த விதத்திலும் சமானமாக்கி விடுகிறார்.

தாய் , தந்தை உணவுதான் தரமுடியும் ஆனால் குருநாதர் தருவது உணர்வு. குருநாதர் அறிவு நலத்தை தருபவர் எரிகின்ற விளக்கினை தூண்டுவது போன்றது உபாசனை இந்த உபாசனை மார்க்கத்தை தெளிவுபடுத்தி இதற்கு உறுதுணையாய் இருந்து அருள் அமுதத்தை பெறச் செய்பவர் ''குருதேவர்'' குருவிற்கு சீடன் தனது உடல் , பொருள் , அனைத்தையும் அளித்து அவருடைய அருள் மொழியைக் கேட்டு நடந்தால் மோட்ச லட்சுமி தோன்றுவாள். குருபதியே சதாச்சாரம். அவர் திருவடிகளை நினைப்பதே முக்தி.

கோடிக்கணக்கான மகாதாணங்களிலும் மகாவிரதங்களிலும் மகாயாகங்களிலும் மிகச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ குருவின் பாதுகா நினைப்பேயாகும்

தெளிவு குருவின் திருமேனி கண்டால்
தெளிவு குருவின் திருநாமம் கேட்டால்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டால்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

குரு என்பவர் உங்களுக்காகவே உங்களைப் பற்றிய பிரச்சனைகளை தீர்த்து உள்ளம் குளிரச் செய்வார். என்னுடைய குருநாதர் சொல்லாமல் சொன்ன, பேசாமல் பேசிய பல்வேறு விஷயங்களின் மூலம் நான் என் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொண்டேன். அவரின் பெயர் நரசிங்க சுவாமிகள். எனக்கு அவர் நிறைய உதவி செய்திருக்கிறார். பேசாத ஒரு குருவை எப்படித் தொடர்பு கொள்வது? குரு நாமத்தை இடையறாது சொல்லிக்கொண்டு இருக்கும் போது ''மனம்'' ஒருமைப்பட்டு குருவின் காலடியில் போய் விழுந்து விடுகின்றது. தன்னுடைய அன்பர் தனக்கு அருகே இருப்பதை உணர்ந்து வெகு எளிதில் சூட்சமாகவே தீர்த்து விடுகிறார்.

பிரச்சனைகள் தீர்ந்த மனது ''குருவின் மீது மேலும் காதலாகி குரு'' என்பவரை இறுகப் பிடித்துக் கொண்டு தன் வாழ்க்கையின் தரத்தை மென் மேலும் உயர்த்திக் கொண்டிருக்கின்றது. இறைவனை நாடி வெகு வேகமாகப் போகின்றது. குருவே இறைவன் என்பதை புரிந்து கொண்டு இறைவனை குருவடிவாக பார்க்கின்றது. அப்போது உள்ளுக்குள் அமைதி ஏற்படுகின்றது. கோபத்தாபங்கள் குறைகின்றன பேராசை அகலுகின்றன. வாழ்க்கை மெல்லிய நீரோடையாய் குருவின் அருளால் நகரத்துவங்கிவிடுகின்றது. ஒரு குருவை மானசீகமாய் உணர்ந்து விட்டால் வீட்டில் செய்கிற பூஜை வெளியே போகின்ற யாத்திரை, சுற்றி வருகின்ற வலம். கோயிலுக்குள் செய்யப்படுகின்ற அபிஷேகம் ,ஆயிரம் பேர்கள் செய்கின்ற வேதநாம யாகம் அத்தனையிலும் குருவின் நாமத்தைச் சொல்லி குருவினுடைய தீட்சயத்தை உணர்ந்து குரு அருகே இருக்கிறார் என்றதுமே என்ன சோதனை வந்தாலும் , அதை எதிர் கொண்டு அதை தாண்டுகின்ற பக்குவத்தை கொடுத்துவிடும். சோதனைகளுக்கு பயப்படுவதில்லை கொடுத்து விடும். சோதனைகளுக்கு பயப்படுவதில்லை.

''குரூர் ப்ரும்மா, குரூர் விஷ்ணுஹு
குரூர் தேவோ மகேஸ்வரஹ
குரூர் ஸாட்ஷாத் பரப்ரும்ம !
தஸ்மை ஸ்ரீ குருவே நம:!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து அருள் மிகு ஜம்புநாதேஸ்வராலயம்
## தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஜம்புகேதீஸ்வர சம்புநாதேஸ்வரம்

ஈழத்து சிவ ஆலயங்களில் (ஈஸ்வரங்களில்) மிகவும் தொன்மை வாய்ந்ததும் முதல் ஈஸ்வர ஆலயமாக திகழ்வதும் ஜம்புகேதீஸ்வர சம்பு நாதேஸ்வரம் ஆகும்

இவ்வாலயம் இன்று அமைந்துள்ள இடத்திலிருந்து நான்கு மைல் கடல் கொண்ட பூமியினுள் அடங்கியிருக்கின்றது. இக்கடல் கோள் பற்றிய வரலாறு சிலப்பதிகார மணிமேகலை நூல்களில் குறிப்பிப்பட்டுள்ளது. இக்கடல்கோளில் போதே காவிரிப்பூம் பட்டணம் கடல்கோள் கொண்டது.

சம்புநாதேஸ்வர ஆலயத் தொன்மையை ஆராயுமிடத்து இவ்வாலயம் ஜம்புகோள துறைமுக பட்டணத்தில் சம்பில்துறையில் சமுத்திரக்கரையில் இருந்தது. இவ்வாலயம் துறைமுகத்தை வந்தடையும் பாய்மரக் கப்பல்களை வரவேற்கிறது. கடற் பிரயானம் செய்வோர் இறைவன் பால் அன்பு கொண்டு நேர்த்தி வைக்கும் ஆலயமாகவும் இருந்தது.

இவ்வாலயத்தில் சரித்திர பிரசித்தி வாய்ந்த அசோக மன்னனின் புதல்வி சங்கமித்திரை தேரை கடற்கரையிலே வந்து வெள்ளரசுக் கிளையுடன் இறங்கினார். இவர்கள் இவ்வாலயத்தை வழிபட்டதும் அதன் பின்னர் சாந்தைப்பிள்ளையாரை வழிபட்டதும் வரலாற்றுச் சான்றாகும்.

இன்றும் பௌத்தமத வழிபாட்டில் கணபதி வழிபாடு விஷ்ணு வழிபாடு பத்தினி தெய்வ வழிபாடுகள் இருப்பது இதற்கு சான்றாகும்.
ஜம்புகேதீஸ்வர துறைமுகத்திற்கும் காவிரிப்பூம் பட்டணத்தில் இருந்து தமிழ் வணிகர்கள் வந்து சென்றார் என்பதையும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

கம்பளச் செட்டியார் ஒருவர் இத்துறை முகத்தை வந்தடைந்த வேளையில் கப்பல் கவிழ்ந்தது என்பதை பௌத்த தமிழ் காவியம் மணிமேகலை பின்வருமாறு கூறுகின்றது.

துறைபிறக் கொழியக் கலங்
கொண்டு பெயர்ந்த அன்றே காரிருள்
இலக்கு நீர் அடைகரை
யக்கலங்கெட்டது (மணி : 25: 189 – 199)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

பணிப்புலத்து முத்துமாரி அம்மனுக்கு
பணிவுடனே பாமாலை சாற்ற – எண்ணிய
எந்தனுக்கு ஏகநாயகன் சாந்தை விநாயகன்
முந்தை முதல் இருந்து காக்கட்டும்.

## அன்னை அகர துதி

அன்னை பணிப்புலத்து முத்துமாரியம்மனின்
அகிலம் போற்றும் அவள் புகழ் பாட
அருளட்டும் அன்னை பணிப்புலத்து முத்துமாரி
ஆசைகொண்டு அவள் புகழ் பாட வந்த
ஆர்வலரை காக்க வேண்டும்
ஆதி அன்னை பணிப்புலத்து முத்துமாரி

இல்லாமையை எம்மிடையே அகற்றி
இயல்பை காக்க வேண்டும்
இனிய அன்னை பணிப்புலத்து முத்துமாரி
ஈடு இணையற்ற எம் அன்னையை
ஈவுடன் பாட வந்த என்னை ஈகையுடன்
காக்கட்டும் அன்னை பணிப்புலத்து முத்துமாரி
உன்னை உவகையுடன் தொழுவோம்
உன் பாதம் சரணடைந்தோம் உத்தமியே
எமை காத்தருள் அன்னை பணிப்புலத்து முத்துமாரி

ஊறிய இன்பம் எம்மிடையே திழைக்க
ஊக்கமுடன் உம்பாதம் சரணடைய
ஊர் போற்றும் தாயே காத்தருள்
அன்னை பணிப்புலத்து முத்துமாரி

ஐக்கியமாய் நாம் உலகில் வாழ ஐயம்
அகற்று அறிவு வளர்த்து ஜெயம்
புரியட்டும் அன்னை பணிப்புலத்து முத்துமாரி

ஓட்டி உறவாட எமக்கு ஒற்றுமை வழங்கிவிடு
எம்மிடையே ஒப்புரவு செய்துவிடு
அன்னை பணிப்புலத்து முத்துமாரி
ஓங்கு புகழுடன் நாம் வாழ ஓடி வந்த எம்மை
ஓர் கொடியின் கீழ் காப்பாற்று
அன்னை பணிப்புலத்து முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓளவையாக காத்த எம்மவளே
ஓளவையமாக காற்றுவிடு
அன்னை பணிப்புலத்து முத்துமாரி

## முத்துமாரியம்மன் பாடல்

01. மஞ்சள் ஆடைகட்டும் பணிப்புலத்து முத்துமாரியே
மங்கல ஆலயம் தேடிவந்தோம்
குங்குமத்தால் கோட்டை கட்டும் பணிப்புலத்து முத்துமாரியே
குங்குலியத்துடன் தேடி வந்தோம்
சாம்பிராணியால் தூபம் ஏற்கும் பணிப்புலத்து முத்துமாரியே -
உன் சந்நிதி தேடி வந்தோம்
கற்பூர ஆராத்தி ஏற்கும் பணிப்புலத்து முத்துமாரியே – உன்
கால் பாதம் தேடி வந்தோம்

02. சிங்காரத் தேரிணில் பவணிவரும் பணிப்புலத்து - முத்துமாரியம்மா
சீராக உம்மை யடைந்தோம் முத்துமாரியம்மா
ஓங்கார புகழ் படைத்த பணிப்புலத்து - முத்துமாரியம்மா
ஒய்யாரமாக உம்மை அடைந்தோம் முத்துமாரியம்மா
அங்காரகம் கையில் கொண்ட பணிப்புலத்து - முத்துமாரியம்மா
அகங்காரம் அடக்க உமையடைந்தோம் முத்துமாரியம்மா
மகராகரகம் தீர்த்தம் ஆடும் பணிப்புலத்து - முத்துமாரியம்மா
மங்களமாய் உன்னை நாடி வந்தோம் முத்துமாரியம்மா
(அங்காரகம் : தீ)
(மகராகரகம் : கடல்)

03. அம்மன் தாலாட்டு பாடி அரவணைக்க வந்தோம்மா
ஆடிப்பூரமதில் ஆடிப்பாடி வந்தோம்மா
அன்னை அருளினால் அகங்காரம் அகன்றதம்மா
ஆவிபொருள் உன்னை நாட வந்தோம்மா
உன் புகழ் பாட உன்னகம் வந்தோம்மா
ஊழ்வினை யாவும் அகன்றதம்மா
என்னகத்தில் உன்னருள் வேண்டுமம்மா
எமக்கு எல்லா உதவியும் தந்திடும்மா

04. அருள் சுரக்கும் அன்னை பணிப்புலத்து - முத்துமாரியம்மா
எமக்கு அருள் புரிந்து காத்திடும்மா
இருள் நீக்கி காப்பவளே அன்னை முத்துமாரி
உன்னருளால் இருள் நீங்கி விட்டதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருள் நீக்கி எம்மை காத்த அன்னை முத்துமாரி
மங்காத அருள் வழங்கிடும்மா
அருள் வேண்டி வந்தோம் எம்மை அன்பாய்
காத்து அன்னை பணிப்புலத்து - முத்துமாரியம்மா

05. பணிப்புலத்து - முத்துமாரியம்மனுக்கு திருவிழா
பணிபுரியும் எல்லோருக்கும் திருவிழா
ஆடிப்புர நாயகிக்கு திருவிழா
அழகிய மங்கையர்க்கும் திருவிழா
கோடி உடுக்கும் சிறுவர்க்கும் திருவிழா
கும்மாளம் ஆடும் இளஞர்கட்கும் திருவிழா
பக்தி கொண்ட அன்னையர்க்கும் திருவிழா
பாசம் கொண்ட பக்தர்களுக்கும் திருவிழா.

06. பண்ணைப் புலத்து உதித்தவளே
பணிப்புலத்து அன்னை முத்துமாரி
உன்னைப் பணிந்து ஏற்ற வந்தோம்
உவகை புரிந்திடும்மா
என்னை உன் பணிபுரியவென
ஏற்றம் அளித்து விட்டாய்
தஞ்சம் என உனை அடைந்தோம்
தாங்கி காத்திடும்மா.

07. தொன்மைக்கு உதாரணமானவளே
பணிப்புலத்து முத்துமாரியம்மா – உன்
தொன்மையின் தெளிவே
ஆலயக் கிணற்று பளிங்குகல் களம்மா
சென்னைக் கிராமங்களில் உன் புகழ்
பட்டி தொட்டியெங்கும் பரப்பினர் - உன் அடியார்
அன்னை அருள் சொரிய வேண்டி நின்றோம்
பணிப்புலத்து - மாரியம்மா

08. அன்னை பணிப்புலத்து - முத்துமாரியம்மன் புகழ்பாட
ஆவல் கொண்ட அடியவனுக்கு
அறிவைக் கொடுத்து ஆண்டாள்
அன்னை பணிப்புலத்து மாரியம்மா
மரம் அரிந்து விறகுபெற விளைந்தவனுக்கு
மறம் கொண்டு உதவி புரிந்த மாரியம்மா
தரம் கொண்ட மரம் அதனில்
தவத்தேர் படைத்தாள் அன்னை முத்து மாரியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பண்ணை புலத்து மக்கள் பாங்குடனே
பண்பான தொழில் புரிய அருள் புரிந்தவளே
பண்ணை புலத்து மக்கள் தென்புலத்து கதிரவனை
வேண்டித் தொழுது அடியவர் நலம் காக்க
அருள் புரிந்த அன்னை பணிப்புலத்து மாரியம்மா
தென்னகத்து கந்த கதிர்காமனுக்கு
தேடிச்சென்று அருள் சேர்க்க
அருள் புரிந்தாள் பணிப்புலத்து - முத்துமாரியம்மா

10. ஆடியிலே அன்னை பணிப்புலத்து - முத்துமாரியம்மா
அருள் புரிந்தாள் ஆவணியில் மழைவரும்
கூடி அவள் கோயிலிலே பணிபுரிந்தாள்
கோடி நன்மை சேர்ந்து விடும்
பாடி அன்னை பணிப்புலத்தாள் புகழ்பாடி
நாடிடுவோம் அவள் பாதம் நாடி
ஓடி அவள் பாதம் சரண் புகுந்தால்
ஓங்கு புகழ் எம்மைச் சேரும்.

11. விந்தைமிகு விஞ்ஞான யுகமதனில்
விரைந்து வந்து அருள் புரிவாள் அன்னை - முத்துமாரி
பண்ணைப் புலத்தில் தோன்றி அருள்பாலித்தால்
பணிப்புலத்து அன்னை முத்துமாரி அம்மன் ஆனால்
சாந்தையம்பதி விநாயகரின் அருட்கடாட்சமும்
சந்தன மணம் கமழ அருள்புரியும் அன்னை - முத்துமாரி
காலை யடிபதி கருணை முருகனின் அருளுடனும்
காக்கின்றாள் எம்மவரை அன்னை பணிப்புலத்து - முத்துமாரி

12. தேரேறி அருள் புரிவாள் பணிப்புலத்து அன்னை -முத்துமாரி
ஆடி பூரமதில் அன்னையவள் தீர்த்தம்மாடி
அற்புத அருள் தருவாள் அன்னை - முத்துமாரி
ஜம்பு கோள கடற்கரையில் புண்ணிய தீர்த்தமாடி
திருவருள் புரிவாள் பணிப்புலத்து அன்னை - முத்துமாரி
ஜம்புதீபம் தொக்கி நிற்கும் தொண்மையதை
ஆலய வரலாற்றிலே கூறிடுவாள்
பணிப்புலத்து அன்னை முத்துமாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் புரியும் அன்னை பணிப்புலத்து முத்துமாரியம்மன்



விந்தைமிகு விஞ்ஞான யுகமதனில்
விரைந்து வந்து அருள்புரிவாள் அன்னை முத்துமாரி
பன்னைப்புலத்தில் தோன்றி அருள் பாலித்ததால்
பணிப்புலத்து அன்னை முத்துமாரி அம்மன் ஆனாள்

சாந்தையம்பதி விநாயகரின் அருட்கடாட்சமும்
சந்தண மணமும் கமழ அருள்புரியும் அன்னை முத்துமாரி
காலையடிப்பதி கருணை முருகனின் அருளுடனும்
காக்கின்றாள் எம்மவரை பணிப்புலத்து அன்னை முத்துமாரி

அற்புதத்தின் அருட்கடாட்சமாக அகத்தில் விளங்கி
அதிர்ச்சியுற்ற கொள்ளைநோய் தீர்த்து அருள் புரிந்தாள்
அன்னை முத்துமாரி

அகந்தை கொண்டு மரத்தில் இருந்த பிசாசை
ஆர்வத்துடன் மரம் தறித்த தொழிலாளிக்கு அருள் புரிந்தாள்
அன்னை முத்துமாரி

ஆண்டவன் பணியே தம்பணி எனும் பணிப்புல மக்கள்
ஆர்வமுடன் கதிர்காம பணிபுரிய அருள் புரிந்தாள்
அன்னை முத்துமாரி

ஆரோகணித்து பக்தர்கள் பவனிவர அருள்பாலிக்கும் அன்னையவள்
தேரேறி அருள் புரிவாள் பணிப்புலத்து அன்னை முத்துமாரி
ஆடிப்பூரத்தில் அன்னையவள் தீர்த்தமாடி
அற்புத அருள் தருவாள் - அன்னை முத்துமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி நிலையதனில் புண்ணிய தீர்த்தமாடி
திருவருள் அருள்புரிவாள் பணிப்புலத்து அன்னை
முத்துமாரி

வாடி நிற்கும் அன்பர்க்கு வரம் அருள்வாள்
வனப்புறவே அருள் தருவாள் அன்னை - முத்துமாரி
கோடியின்பம் நாம் பெறவே கொடை அருள்வாள் - அவள்
கோலாகலத் திருவிழா காணுகிறாள் - பணிப்புலத்து
அன்னை முத்துமாரி

அன்னையவள் திருப்பாவையாக அவதரித்தது ஆடிப்பூரத்தில்
அந்த அரிய தினமதனில் ருது அடைந்தாள் - அன்னை
முத்துமாரி
தன்னையென்று நம்பிச் சரண் அடைந்தோரை
தாங்கிடுவாள் காத்திடுவாள் - பணிப்புலத்து அன்னை
முத்துமாரி

முத்துமாரி புகழ்பாடி நாம் அடையும் இன்பம்
முதுசமாக எமக்கு கிடைக்கும் அன்னை முத்துமாரி அருள்
தஞ்சம் என வந்தோரை தாங்கி நிற்கும் - அன்னை முத்துமாரி
அவள் கால் பணிந்து சரணம் என அடைவோம்.

திருச்சிற்றம்பலம்.

பிறவாதிருக்க வரந்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டுகாண் - இது எப்படியோ
அறமார் புகழ்தில்லை யம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே அது காண் நன் மருந்துனக்கே

(பட்டினத்தார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜம்பு கேதீஸ்வரம் புகழ்பாட
ஜம்பு கோளப் பட்டணத்துக்கு அருகே
சாந்தையம் பதியில் வதியும்
ஐங்கரனே நீ காப்பு

## ஜம்பு கேதீஸ்வரர் போற்றி துதி

01. ஆதித் தொண்மை பகரும் ஜம்புதீவில்
ஆடல் அரசன் கடலையில் நடராஜா தத்துவம்
நாட்டிய நிலையில் பறை சாற்றி நிற்கும்
ஜம்பு கேதீஸ்வர போற்றி.

02. ஜம்பு கேதீஸ்வரன் புகழ்பாடும்
போற்றி அகவலை புனையும்
பணியதற்கு கேதீஸ்வரன் மகனின்
பெயர் சூடிய சக்திவேலை பணித்தமைக்கு போற்றி.

03 மணி பல்லவம் கண்ட புத்த பீடிகை
மங்கா புகழ் படைக்கு முன்பே
ஆதி சிவன் ஜம்பு கேதீஸ்வரன்
நாவல் மர கூடலில் அமர்ந்தவனுக்கு போற்றி.

04. கடல் வாணிபத்தை கட்டி காத்து
கப்பலோட்டிகளுக்கு தோற்றத்துணையாக
கருணை பூண்ட ஜம்பு கேதீஸ்வர
உனது புகழ் அதற்கு போற்றி

05. அரச மரத்துடன் வந்த சங்கமித்தை
வணங்கி அருள் பெற்று வரம் பெற்று
சாந்தையம் பதியில் பர்ணசாலை அமைக்க
அருள் கொடுத்த ஜம்பு கேதீஸ்வர போற்றி

06. மணிமேகலை போற்று மணிமேகல தெய்வமும்
மங்காப் புகழ் கொண்ட கடல் கோளிதை
அழித்த ஈஸ்வரத்தை கொண்ட
கருணை கடலான ஜம்பு கேதீஸ்வர போற்றி

07. கடலும் சுனையும் வரமாக கொண்ட
கூத்த பெருமானின் மயானமுடைய
கடல்கோள் கொண்ட தொண்மை யுடைய
ஜம்பு கேதீஸ்வர போற்றி

08. வயல் வளமும் மண் வளமும்
கடல் வளமும் கருணை வளமும்
கற்பனா சக்தி கொண்ட
ஜம்பு கேதீஸ்வர போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org